[2001 செப்டம்பர் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருக்கும் அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்.

வினா எண் 43, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

43–

கால்நடை மருத்துவமனை

***1673–திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கோ. சத்திரத்துக்கு கால்நடை துணை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டத்தில் அமைந்துள்ள கோ. சத்திரம் கிராமத்திலிருந்து 2 கிலோமீட்டர் தொலைவில் இரண்டு கால்நடை கிளை நிலையங்கள் செயல்படுவதால் கோ. சத்திரம் கிராமத்தில் மேலும் ஒரு கால்நடை துணை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ. சத்திரத்தை ஒட்டியுள்ள புதுக்குப்பம், வேகக்கொல்லை, காட்டு வேகக்கொல்லை, வடக்கு வசனாகுப்பம், தெற்கு வசனாகுப்பம் என்று பல்வேறு கிராமங்கள் கோ. சத்திரம் பகுதியில் வந்து பயன்பெறுகின்ற வகையில் கால்நடை துணை மருத்துவமனை இல்லாமல் அந்த மக்கள் அவதிப்பட்டு வருகிறார்கள். பெரும்பான்மையான விவசாய மக்கள் கால்நடைகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்து வருகின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு நிதியாண்டில் அந்தப் பகுதிக்கு கால்நடை துணை மருத்துவமனை அமைத்துத் தருவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டத்தில் அமைந்துள்ள கோ. சத்திரம் என்னும் கிராமம் மருங்கூர்

2001 செப்டம்பர் 4]

கால்நடை மருந்தக எல்லைக்குட்பட்ட கிராமம் ஆகும். மேற்படி கிராமத்திற்கு அருகிலேயே 2 கிலோமீட்டர் தொலைவில் காட்டு வேகக்கொல்லை கால்நடை கிளை நிலையமும், 5 கிலோமீட்டர் தொலைவில் வெங்கடாம்பேட்டை கால்நடை கிளை நிலையமும் அமைந்துள்ளன. எனவே, கோ. சத்திரம் என்ற கிராமத்தில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்றும், கோ. சத்திரம் கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு மேற்படி ஊர்களில் இருக்கும் நிலையங்கள் மூலம் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 44, திரு. கு. ஜெயக்குமார், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.*

44–

குளிர்பதனக் கிடங்கு

***7451–திரு. கு. ஜெயக்குமார்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழகத்தில் அதிகமான கோழி முட்டை உற்பத்தி நாமக்கல்லில் இருப்பதால், முட்டைகளைத் தேக்கி வைத்து விற்க அப்பகுதியில் குளிர்பதனக் கிடங்கு ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஆம்.

(ஆ) நாமக்கல் மாவட்டத்தில் பெருகி வரும் முட்டை உற்பத்தி நலிந்துவிடாத நிலையில் அதனை குளிர்பதனக் கிடங்கில் தேக்கி வைத்து முட்டைகளைப் பாதுகாக்க நாமக்கல் பகுதியில் குளிர்பதனக் கிடங்கு ஒன்று அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாமக்கல் பகுதியில் ஓராண்டிற்கு 3,756 மில்லியன் முட்டைகள் உற்பத்தியில் சுமார் 10 மில்லியன் முட்டைகள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, மீதமுள்ள முட்டைகளின் விலையைச் சீராக நிலைப்படுத்த கட்டட அமைப்பு வசதிகள் கொண்ட குளிர்பதன நிலையம் அமைப்பதற்கும்,